



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலூர் ஒன்றியம், நாவினிப்பட்டி ஊராட்சி, நாவினிப்பட்டி கிராமம், சர்வே எண்கள்- 261/6,10**B** ,262 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

கோப்பு எண் : **2UK18065/2025/TCP**

அளவுதிட்டம் = 1:400

வ

**குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 2.20 ஏக்கர் (அ) 8900.00 ச.மீ. |
| சாலை (ம) மூலைமுடக்கு பரப்பு | : | 2954.15 ச.மீ. |
| மீதமுள்ள மனைப்பிரிவின் பரப்பு | : | 5945.85 ச.மீ. |

மனைப்பிரிவின் எல்லை

மனைப்பிரிவு சாலை

நிலையிலுள்ள சாலை

கோரிய மனைகளின் : 41 எண்ணம்

ஒதுக்கிய மனைகளின் : 40 எண்ணம்

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு } (மனையிடத்தின் மொத்தப்பரப்பு - சாலையின் பரப்பு) X 10%
(8900.00 - 2954.15 ) x 10%= 594.58 ச.மீ.

## பொது ஒதுக்கீடு

(அரசாணை எண் 18 ந.நி(ம)கு.வ(ந.ப1)துறை நாள்: 04.02.2019-ன் விதி-47(6)-ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/ 2019-பிஏ2, நாள்:05.02.2020, CASE-V -ன்படி பூங்கா பரப்பளவு-594.58 ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

## பொது உபயோகம்

(TNCD & BR 2019, விதி-(47(8) -ன்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது 1% ஒதுக்கீடு)

உள்ளாட்சி உபயோகத்திற்க்கு - 31.50 ச.மீ. (0.53%)

தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்க்கு - 34.30 ச.மீ. (0.58%)

**கட்டிட வரம்பு:**

7.20 மீ (ம) 9.00 மீ அகலமுள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்பட வேண்டும்.

**மூலை முடக்கு:**

12.0மீ-க்கு கீழ் வரை அகலமுள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்பட வேண்டும்.

## நிபந்தனைகள்:

1.இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன்,இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகங்களுக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்யப்பட வேண்டும்.

2.அரசாணை எண்:- 21, ஊரக வளர்ச்சித்துறை நாள்:16.06.2003-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரிக்கு முழு திருப்தி உள்ளது என சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3.அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, -ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.

4.நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களான கிரையப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிப்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்றும் சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 5மீ அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

8.உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

9.உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

குறிப்பு:
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மா.ந.ஊ.அ.எண்: 34/2025 (இணையதள ஒப்புதல்)**

Signature Not Verified

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.